## நாம் எப்போதுமே டெல்லிக்கு ‘அவுட் ஆப் கன்ட்ரோல்’தான்! மராட்டிய முதல்வர்

# பட்னாவிஸ் மிரட்டல் எல்லாம் இங்கே பலிக்காது!

## தருமபுரி, சேலம் பிரச்சாரக் கூட்டங்களில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆவேசம்!

**தருமபுரி, ஏப்.10–**

**“நாம் எப்போதுமே டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல்தான். மகாராஷ்டிரா முதலமைச்சர் பட்னாவிஸ் மிரட்டல் எல்லாம் இங்கே எடுபடாது” என்று கழகத்துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தருமபுரி, சேலம் மாவட்டப் பிரச்சாரக் கூட்டங்களில் ஆவேசமாகக் கூறினார்.**

தி.மு.க.துணைப் பொதுச் செயலாளரும், நாடாளு மன்ற தி.மு.க.குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. ஏப்ரல் 8 மாலையில் அரூர் சட்ட மன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் சண்முகம், ஏற்காடு தி.மு.க. வேட்பாளர் ரேவதி மாதேஸ்வரன், வீரபாண்டி தொகுதி தி.மு.க. வேட்பாளர் தருண், சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதி தேமுதிக வேட்பாளர் மோகன்ராஜ் ஆகியோருக்கு பரப்புரை செய்தார்.

அப்போது கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியதாவது:

“கோவை, மதுரைக்கு மெட்ரோ ரயில் கேட்டு நாம் போராடினோம். அப்போது மெட்ரோ இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்நிலையில், மதுரையில் பா.ஜ.க.வின் தேர்தல் பிரச்சாரத்துக்காக வந்த மகாராஷ்டிர பாஜக முதலமைச்சர் தேவேந்திர பட்னவிஸ், ‘நீங்க பாஜகவுக்கு ஓட்டு போடுங்க. மதுரைக்கு மெட்ரோ திட்டத்தைக் கொண்டுவர்றோம்’ என்று சொல்லியிருக்கிறார். அப்படியென்றால் ஓட்டு போடலைன்னா எந்த திட்டமும் கிடையாதா?

நம்ம முதலமைச்சர் அண்ணன் ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்தே நன்மை செய்வேன் என்று சொன்னார். அப்படிப்பட்ட நமது முதலமைச்சர் எங்கே? எங்களுக்கு ஓட்டு போட்டாதான் மெட்ரோ திட்டம் வருமென்று மிரட்டிப் பார்க்கும் கூட்டம் எங்கே என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மிரட்டல் எல்லாம் நம்மிடம் பலிக்காது. நாம் எப்போதுமே டெல்லிக்கு அவுட் ஆஃப் கன்ட்ரோல்தான்.

### பீகாரில் மோடி என்ன சொன்னார்?

இன்று திடீரென்று வந்து தமிழ்நாடு பிடிக்கும், தமிழ் படிக்க ஆசையா இருக்கிறது என்று பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் சொல்லி வருகிறார்கள். ஆனால் பிகாரில் மோடி என்ன சொன்னார்? தமிழ்நாட்டில் பிகாரிகள் பாதுகாப்பாக இல்லை என்று சொல்லிவிட்டு இப்போது இங்கே வந்து நம்மிடம் வாக்கு கேட்கிறார்கள். மொழியின் வழியாக மதத்தின் வழியாக மக்களைப் பிரிக்கும் அவர்களை நாம் புறக்கணிக்க வேண்டும்.

தலைவர் கலைஞர் 20 வருடங்களுக்கு முன்பு இலவச கலர்டிவி கொடுத்தார். அதுமட்டுமல்ல பெண்களுக்கு இலவச டபுள் பர்னர் கேஸ் அடுப்பு கொடுத்தவர் தலைவர் கலைஞர். பெண்கள் அடுப்பங்கரையிலேயே அதிக நேரத்தை செலவிடாமல் சீக்கிரம் சமையலை முடித்துவிட்டு சமையல் அறையை விட்டு வெளியுலகத்துக்கு வர வேண்டும் என்பதற்காகவே டபுள் பர்னர் கேஸ் அடுப்பு கொடுத்தவர் தலைவர் கலைஞர். அவர் வழியிலேயே நமது முதலமைச்சர் தளபதி கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றியிருக்கிறார், தொடர்ந்து காப்பாற்றுவார்.

அதைப் போலத்தான் உங்களுக்கு என்ன தேவையோ அதை பெற்றுக் கொள்வதற்காகத்தான்



எட்டாயிரம் ரூபாய் கூப்பன் அறிவித்துள்ளார்.

### அரூர் தொகுதி:

இந்த அரூர் சட்டமன்றத் தொகுதியில் நாம் செய்த சாதனைகள் சொல்லிக்கொண்டே போகலாம்.

அரூர் சட்டமன்றத் தொகுதியில் கலசப்பாடி உள்ளிட்ட 9 மலை கிராமங்களுக்கு 12.5 கோடி மதிப்பில் புதிய தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

தர்மபுரியில் இருந்து அரூர் வழியாக திருவண்ணாமலை செல்லும் இரு வழித் தடமாக இருந்த சாலை 48 கிலோமீட்டடர் தூரத்துக்கு 410 கோடி மதிப்பீல் நான்கு வழி பாதையாக மாற்றப்பட்டுள்ளது. 13.6 கோடி மதிப்பீட்டில் அரூர், கடத்தூர்,காரிமங்கலம், பாப்பிரெட்டிபாளையம், பாப்பாரப்பட்டி , மரண்டஹல்லி ஆகிய பேரூர்களில் 18 கிலோ மீட்டர் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

அரூர் அரசு மருத்துவமனை வளாகத்திலே 12.51 கோடி மதிப்பீட்டில் சிறப்பு பிரிவு மருத்துவனை கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. ஈச்சம்பாடி அணைக்கட்டில் இருந்து பாசனத்துக்கு பயன்படுத்தப்படும் வலதுமற்றும் இடது கால்வாய் 9 கோடி மதிப்பீட்டில் சரி செய்யப்பட்டு வருகிறது.

புதிதாக அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க 6.8 கோடி மதிப்பீட்டில் டெண்டர் முடிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. சித்தேரி மண்ணூார் புடிய சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு கோட்டப்பட்டி சிட்லின் புதிய சாலை அமைக்க பணிகள் செய்யப்பட்டு வருகின்றது.

ஆதி திராவிடர் நலத்துறை சார்பில் கலசப்பாடியில் 3.6கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பள்ளிக் கட்டிடம், அறிவியல் ஆய்வுக் கூடம் கட்டப்பட்டு வருகிறது. இத்தனை சாதனைகளை செய்து முடித்துவிட்டுதான் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டி உங்களை தேடி வந்திருக்கிறேன்.

### வீரபாண்டியாரை மறந்துவிட முடியாது!

இங்கே பேசும்போது சேலத்து சிங்கம் வீரபாண்டியாரை மறந்துவிட்டு யாராலும் பேச முடியாது. அவருடைய நினைவுகளோடு, அவருக்கும் தலைவர் கலைஞருக்கும் இருந்த பாச உணர்வையும் நினைவில் நிறுத்தி, உங்களுக்கும் அவருக்கும் இருந்த பற்றை நினைவுகொண்டு, எனக்கும் அவருக்கும் இருந்த பாசத்தை நினைவிலே ஏந்திதான் இங்கே நான் நின்றுகொண்டிருக்கிறேன்.

அவரது பெயரை சொல்லாமல் இந்த பகுதியிலே நாம் யாரைப் பற்றியும் பேச முடியாது என்று எனக்குத் தெரியும். இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வீரபாண்டியாருக்கு எனது வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது முதலமைச்சர் அண்ணன் மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய் மாதாமாதம் தருகிறேன் என்று சொன்னபோது பலர் இது முடியாது என்று சொன்னார்கள். ஆனால் சொன்னதை செய்து சாதித்துக் காட்டியவர் நமது தளபதி. அடுத்து நமது ஆட்சிதான். அப்போது மாதம் 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்

இவ்வாறு சொன்னதை செய்தோம் என்ற உரிமையோடுதான் உங்களை சந்தித்து வாக்குகேட்டு வந்திருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டுக்கு எதிரான பாஜகவோடு சேர்ந்துவரும் பத்து தோல்வி பழனிசாமியை, பதினோரு தோல்வி பழனிசாமியாக மாற்றி அனுப்பிவிடலாம். வேண்டுமென்றால் அவரெங்கேனும் ஆளுநராக போகட்டும்.

### சேலத்து சிங்கம்!

ஒருமுறை மிகப்பெரிய பிரச்சாரக் கூட்டத்துக்காக சேலத்துக்கு தலைவர் கலைஞர் வந்திருந்தார். தலைவர் கலைஞரின் வாகனம் சாய்ந்துவிடுமோ என்ற அளவுக்கு கூட்டத்தில் வாகனம் படகு போல மிதந்தது. காவல் துறை அதிகாரிகள் இறங்கியும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அப்போது தலைவரின் வாகனத்தில் இருந்து இறங்கினார் வீரபாண்டியார். ‘இறங்காதய்யா... ‘ என தலைவர் கூறியபோதும் அந்த கூட்டத்தில் இறங்கினார் வீரபாண்டியார். அவ்வளவுதான் அப்படியே கூட்டம் இரண்டாக வழி விட்டது. அவர்தான் சேலத்து சிங்கம் வீரபாண்டியார். அப்படிப்பட்ட வீரபாண்டியாரின் நினைவை எந்நாளும் மறக்க முடியாது.

இன்னும் ஒரு மாதத்தில் ஆட்சிக்கு மீண்டும் வந்துவிடுவோம். அப்போது நமது முதலமைச்சர் அண்ணன் அளித்த அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைமை தேர்தல் அலுவலகத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. கழக நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். உடன் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டாகடர் ஆர்.எஸ். கிருத்திகாதேவி, தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சியின் துணை மேயர் கோ. காமராஜ், மண்டலத் தலைவர் பகுதிச் செயலாளர் டி.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன் மற்றும் மாநகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



சென்னை கத்தீட்ரல் சாலையில் உள்ள மெட்ராஸ் மறைமாவட்ட அலுவலகத்தில், பேராயர் பால் பிரான்சிஸ் இரவிச்சந்திரன் அவர்களை அமைச்சர் மா. சுப்ரமணியன் – (சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி ) தலைமையில் நடைபெற்ற சந்திப்பின் போது, கழக வேட்பாளர்கள் பேராயரை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் எம்.பி. உள்ளார். எஸ். சுதர்சனம் (மாதவரம் சட்டமன்ற தொகுதி), ஆர்.டி. சேகர் (பெரம்பூர் சட்டமன்ற தொகுதி), மயிலை தா. வேலு (மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி), ராஜா அன்பழகன் (தியாகராயர் நகர் சட்டமன்ற தொகுதி), ஜே.ஜே. எபினேசர் (ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி) உள்ளனர்.

## களத்தில் இளைஞர் அணி

**மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.**



ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி, சென்னை மேற்கு மாவட்டம்.



நாமக்கல் சட்டமன்றத் தொகுதி, நாமக்கல் கிழக்கு மாவட்டம்.



ஓமலூர் சட்டமன்றத் தொகுதி, சேலம் மத்திய மாவட்டம்.



கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி, ஈரோடு வடக்கு மாவட்டம்.



திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, மதுரை தெற்கு மாவட்டம்.



அரூர் சட்டமன்றத் தொகுதி, தருமபுரி கிழக்கு மாவட்டம்.



திருவையாறு சட்டமன்றத் தொகுதி, தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.



திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி, திருச்சி தெற்கு மாவட்டம்.



மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி, மதுரை மாநகர் மாவட்டம்.